Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 09-04-2026
Deposition of witness for : PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திலகன் | வயது | : | 23 |
| தந்தை பெயர் | : | சிங்காவேலன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பாரதிதாசன் நகர் 4 ம் தெரு | தொழில் | : | டெக்ரேசன் வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

**Ld. D. Counsel not Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:ங

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன்.

2) இந்த வழக்கில் இறந்துபோன சசிகுமாரை தெரியும். அ.சா.1, 2 ஆகியோர்களை தெரியும்.

3) கடந்த 9.9.2025 ம் தேதி காலை 11.10 மணியளவில் கலைஞர் நகர் 1 ம் தெருவில் 7.9.2025

அன்று அண்ணாநகர் 18ம் தெருவில் இரவு 8 மணியளவில் நின்றுக்கொண்டிருந்தேன். வாழை என்கிற தினேஷ் என்னுடைய நண்பர். அவர் வந்தார். ஏண்டா ஏரியா பக்கம் வரதே இல்லை ஆளை காணும் என்று நான் அவரை விசாரித்தேன். அதற்கு அவர் சக்தி வீட்டில் Free Fire Game விளையாடிக்கொண்டிருந்ததாகவும் சக்தியும் ராஜாவும் கஞ்சா குடித்துகொண்டிருந்ததை அவர் பார்த்துவிட்டதால் அவரை சக்தியும் ராஜாவும் அடித்து விட்டார்கள் என்றும் அதனால் வரவில்லை என்று என்னிடம் சொன்னார்.

4) அதனால் நான் ராஜாவுக்கு போன் செய்து ஏன் வாழை என்கிற தினேஷை அடித்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு ராஜாவும் சக்தியும் இதை பற்றி கேட்கிற அளவுக்கு நீ பெரிய ஆளா, காலையில் உன்னை காலி செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதனால் நான் போனை வைத்துவிட்டேன்.

5) 8.9.2025 அன்று எங்கள் ஏரியா முனையில் இரவு 10.30 மணியளவில் நான் நின்றுகொண்டிருந்தேன். அங்கு சசிகுமார் வந்தான். ராஜாவும், சக்தியும் போனில் என்னை மிரட்டிய விபரத்தை சசிக்குமாரிடம் சொன்னேன். உடனே சசிகுமார் ராஜாவுக்கு போன் செய்து ஏண்டா திலகனை மிரட்டினீர்கள் என்று கேட்டான். என்னை மிரட்டியதுபோலவே சசிக்குமாரையும் எங்களுக்கு போன் செய்து கேட்கிற அளவுக்கு நீ பெரிய ஆளா என்றும் காலையில் நீ உயிரோடு இருக்க மாட்டாய் என்றும் மிரட்டினார்கள்.

6) அதற்கு சசிக்குமார் மிரட்டுகிற வேலையை என்னிடம் வைத்துக்கொள்ளாதே என்று போனை துண்டித்து விட்டார். 9.9.2025 அன்று காலை 10 மணியளவில் சசி வீட்டில் நானும்

சசியும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ராஜா எனக்கு போன் செய்தான். அந்த போனை வாங்கி சசி பேசினான். நம்ம சண்டையை பேசி தீர்த்துகொள்வோம் எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று சசியிடம் ராஜா கேட்டான். அதற்கு சசி கலைஞர்நகர் 1வது தெருவில் உள்ள சூர்யா அண்ணன் வீட்டிற்கு வா அங்கு வைத்து பேசிக்கொள்ளலாம் என்று சொன்னான்.

7) நானும் சசியும் அங்கு செல்வதற்காக புறப்பட்டோம். அப்போது குஞ்சாண்டி என்கிற பிரதீப் வண்டி இரவல் கேட்டு வந்தான். அதற்கு சசி ஒரு பிரச்சினையை பேச வேண்டியது இருக்கு வா பேசி முடித்துவிட்டு உனக்கு தருகிறேன் என்று சொன்னான். பிறகு 3 பேரும் சசி வண்டியில் புறப்பட்டு கலைஞர் நகர் சூர்யா வீட்டிற்கு பகல் 11 மணிக்கு போனோம்.

8) அந்த இடத்திற்கு போனபோது சக்தி, ராஜா, கோகுல், பிரபா, சுஜித், சரண், நிமோசன், வசந்த், பிரேம், ரஞ்சித், சபரி ஆகியோர் வந்தார்கள். வந்தவுடன் சக்தி சசியை பார்த்து உங்க வீட்டுல கஞ்சா அடிச்சா விட்டுறுவியா அதனால்தான் நான் வாழையை அடித்தேன் என்று சொன்னான். அதற்காக நீ வாழயை அடிப்பியா என்று சக்தியை பார்த்து சசி கேட்டான். நீ என்ன வாழைக்கு சப்போட்டா என்று சக்தி கேட்டான். அந்த இடத்திற்கு இருவருக்கும் வாய் தகறாறு ஆனது.

9) அதற்கு சூர்யா நான் குடியிருப்பது வாடகை வீடு இந்த வீட்டில் எதுவும் பேசவேண்டாம். தெரு முனையில் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னான். அதனால் எல்லோரும் புறப்பட்டு தெரு முனைக்கு போனோம். சசி முன்னால் போனான். மற்ற எல்லோரும்

அவனுக்கு பின்னால் போனோம். சசிக்கு பாதுகாப்பாக நான், சூர்யா, பிரதிப் ஆகிய மூவரும் சசி பின்னாலேயே போனோம். ஆதிமூலம் என்பவர் பிளாட்டுக்கு முன்னால் போய்கொண்டிருந்தபோது திடிரென்று சுஜித் என்பவன் சசியின் தலையில் கையால் ஓங்கி குத்தினான். அப்போது சசி தடுமாறி கீழே விழுந்தான்.

10) அப்போது சக்தி மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து சசிக்குமாரின் தலையிலேயே வெட்டினான். தடுப்பதற்காக சசி குமார் இடது கையை தூக்கியபோது இடது கையிலும் வெட்டு விழுந்தது. ராஜா தான் வைத்திருந்த அருவாளால் சசிக்குமாரின் தலையில் வெட்டினான். தடுக்கபோன என்னை பிரபா அவன் கையால் என் தலையில் தாக்கி என்னை தடுத்தான். சூர்யா தடுக்க போனான். அவனை பிரபாவும் சரணும் பிடித்துக்கொண்டார்கள்.

11) மீதி இருந்த அண்ணை வேளாங்கன்னி கல்லூரி மாணவர்கள் யார் தடுக்க வந்தாலும் உங்களுக்கும் இதே கதிதான் என்று மிரட்டினார்கள்.

12) சூர்யாவை பிடித்து இருந்த பிரபா சூர்யாவை தள்ளிவிட்டுவிட்டு ராஜா வைத்திருந்த அருவாளை வாங்கி சசிகுமாரின் தலையில் வெட்டினான். சக்தி வைத்திருந்த வாளை சக்தியின் தம்பி கோகுல் வாங்கி சசிக்குமாரின் தலையில் வெட்டினான். நாங்கள் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கத்தினோம். ராஜா, சக்தி, கோகுல், பிரபா மற்றும் அண்ணை வேளாங்கன்னி கல்லூரி மாணவர்கள் எல்லோரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

13) அதன்பிறகு நான் எங்கள் ஏரியாவிற்கு போனேன். அங்கு ஒரு துக்க வீட்டில் சசிக்குமாரின் அக்கா காவ்யா இருந்தார். அவரிடம் போய் கலைஞர் நகர் 1வது தெருவில் வைத்து சசிக்குமாரை வெட்டிவிட்டார்கள் என்று அழுதேன். காவ்யா தன் அம்மாவை கூப்பிட்டுக்கொண்டு கலைஞர் நகர் 1வது தெருவிற்கு வந்தார்கள். நானும் அவர்களோடு வந்தேன். சசிக்குமார் இறந்து கிடந்ததை பார்த்து சசிக்குமாரின் தாயார் கதறி அழுதார்.

14) சசிக்குமார் அம்மா சூர்யாவை பார்த்து யார் என் மகனை வெட்டியது என்று கேட்டார். அப்போது சூர்யா சசிக்குமாரை சக்தி, ராஜா, பிரபா, கோகுல் மற்றும் எல்லோரும் சேர்ந்து சசிகுமாரை வெட்டிவிட்டார்கள் என்று சொன்னான்.

15) பிறகு அங்கு வந்தஆம்புலன்ஸ் சசிக்குமாரின் உடலை எடுத்து சென்றது.

16) சூர்யா வந்து என்னிடம் எதனால் வெட்டினார்கள் என்று கேட்டான் அவனிடம் சக்தி வீட்டில் Free Fire Game விளையாடிக்கொண்டிருந்ததாகவும் சக்தியும் ராஜாவும் கஞ்சா குடித்துகொண்டிருந்ததை அவர் பார்த்துவிட்டதால் அவரை சக்தியும் ராஜாவும் அடித்து விட்டார்கள் என்றும் அதனால் வரவில்லை என்று என்னிடம் சொன்னார் என்றும் அதனால் நான் ராஜாவுக்கு போன் செய்து ஏன் வாழை என்கிற தினேஷை அடித்தீர்கள் என்று கேட்டேன் என்றும் அதற்கு ராஜாவும் சக்தியும் இதை பற்றி கேட்கிற அளவுக்கு நீ பெரிய ஆளா, காலையில் உன்னை காலி செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதனால் நான் போனை வைத்துவிட்டேன் என்றும் 8.9.2025 அன்று எங்கள் ஏரியா முனையில் இரவு 10.30 மணியளவில் நான் நின்றுகொண்டிருந்தேன்என்றும் அங்கு

சசிகுமார் வந்தான் என்றும் ராஜாவும், சக்தியும் போனில் என்னை மிரட்டிய விபரத்தை சசிக்குமாரிடம் சொன்னேன் என்றும் உடனே சசிகுமார் ராஜாவுக்கு போன் செய்து ஏண்டா திலகனை மிரட்டினீர்கள் என்று கேட்டான் என்றும் என்னை மிரட்டியதுபோலவே சசிக்குமாரையும் எங்களுக்கு போன் செய்து கேட்கிற அளவுக்கு நீ பெரிய ஆளா என்றும் காலையில் நீ உயிரோடு இருக்க மாட்டாய் என்றும் மிரட்டினார்கள் என்றும் அதற்கு சசிக்குமார் மிரட்டுகிற வேலையை என்னிடம் வைத்துக்கொள்ளாதே என்று போனை துண்டித்து விட்டார் என்றும் 9.9.2025 அன்று காலை 10 மணியளவில் சசி வீட்டில் நானும் சசியும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ராஜா எனக்கு போன் செய்தான் என்றும் அந்த போனை வாங்கி சசி பேசினான் என்றும் நம்ம சண்டையை பேசி தீர்த்துகொள்வோம் எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று சசியிடம் ராஜா கேட்டான் என்றும் அதற்கு சசி கலைஞர்நகர் 1வது தெருவில் உள்ள சூர்யா அண்ணன் வீட்டிற்கு வா அங்கு வைத்து பேசிக்கொள்ளலாம் என்று சொன்னான் என்ற விபரத்தை சொன்னேன்.

17) ஆட்டோ ஓட்டும் ஹரிஹரன் தூண்டுதலின்பேரில்தான் இந்த சம்பவமே நடந்தது.

18) இது சம்பந்தமாக தஞ்சாவூர் தாலுக்கா போலிசார் என்னை விசாரித்தார்கள். பிறகு 15.09.2025 ம் தேதி தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் என்னை விசாரித்தார்கள். பிறகு 23.09.2025 அன்று மறுபடியும் போலிசார் வீட்டில் வந்து விசாரித்தார்கள்.

19) மேற்படி எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். ஆஜர்

எதிரிகளின் வரிசையில் 2 வதாக நிற்கும் ராஜாவும் 3 வதாக நிற்கும் பிரபாவும் அருவாளால் வெட்டினார்கள். ( நீதிமன்றம் 2 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் சஞ்சய் என்று கூறினார். நீதிமன்றம் 3 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் பிரபாகரன் என்று கூறினார். ) வரிசையில் 4 வதாக நிற்பவர் பெயர் சக்தி அவர்தான் வாளை வைத்து வெட்டியவர் ஆவார். ( நீதிமன்றம் 4 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் சக்தி என்று கூறினார். சாட்சி தற்போது சக்தி என்கிற ஹரிஹரன் என்று கூறுகிறார்.) வரிசையில் 5 வதாக நிற்பவர் பெயர் கோகுல். அவர் வாளை வைத்து வெட்டினார். ( நீதிமன்றம் 5 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் கோகுல் என்று கூறினார்.) வரிசையில் 6 வதாக நிற்பவர் பெயர் சபரி. ( நீதிமன்றம் 6 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் சபரிஸ்வரன் என்று கூறினார்.) வரிசையில் 7 வதாக நிற்பவர் பெயர் சுஜித். ( நீதிமன்றம் 7 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் சுஜித்குமார் என்று கூறினார்.) வரிசையில் 8 வதாக நிற்பவர் பெயர் சரண். ( நீதிமன்றம் 8 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் சரண் என்று கூறினார்.) வரிசையில் 9 வதாக நிற்பவர் பெயர் மறந்துவிட்டது. வரிசையில் 10 வதாக நிற்பவர் பெயர் பிரேம். ( நீதிமன்றம் 10 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் பிரேம்குமார் என்று கூறினார்.) வரிசையில் 11 வதாக நிற்பவர் பெயர் வசந்த். ( நீதிமன்றம் 11 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் வசந்த்

என்று கூறினார்.) வரிசையில் 12 வதாக நிற்பவர் பெயர் நிமோசன். ( நீதிமன்றம் 12 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் நிமோசன் என்று கூறினார்.) வரிசையில் 13 வதாக நிற்பவர் பெயர் ரஞ்சித். ( நீதிமன்றம் 13 வதாக நிற்கும் நபரிடம் உன் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் ரஞ்சித் என்று கூறினார்.)

20) எதிரிகள் சசியை வெட்டிய ஆயுதங்களை காட்டினால் என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் வாளால்தான் சக்தியும் கோகுலும் சசியை வெட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் அருவாளால்தான் ராஜாவும் பிரபாவும் சசியை வெட்டினார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

12 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்ய இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதனால் மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பிறகு 12 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது)

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.09 19:09:46 +0530